திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்த தீ விபத்து ஏற்பட்டதற்குக் காரணம் என்ன? இதிலே எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தற்செயலாக நேர்ந்த விபத்து என்று போலீஸார் முடிவு கட்டியிருக்கிறார்கள். சுமார் 25 ஆயிரம் ரூபாய்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இந்த விபத்தினால் இரண்டு பெரிய சொஸைடிகள் அம்பாசமுத்திரம் கூட்டுறவு சொஸைடி, தேங்காய் பட்டணம் கூட்டுறவு சொஸைடி ஆகிய இரண்டு பெரிய சொஸைடிகளில் சேதம் ஏற்பட்டிருக்கிறதே இதை ஈடுகட்ட அரசு நஷ்ட ஈடு எவ்வளவு கொடுத்திருக்கிறது? இப்படிப்பட்ட பெரிய கண்காட்சியிலே தீயணைப்பு எஞ்சின் அங்கே இல்லாமல் இருந்திருக்கிறது, கண்காட்சி நடந்து கொண்டிருக்கும்போது ஏன் அந்த எஞ்சின் அங்கே வைக்கப்படவில்லை என்பதைப் பற்றி அரசு விசாரித்திருக்கிறதா? அப்படியானால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது திருநெல்வேலியில் நடைபெற்றது. அந்த நகரத்திலேயே தீயணைப்புப் படை இருக்கிறது. ஆகவே, அங்கேயே வைக்கப்பட வேண்டிய அவசியமில்லை. இந்த நஷ்டத்தை ஈடுகட்ட மாவட்ட ஆட்சியாளர் அவர்கள் கூட்டுறவு சங்கங்களிலிருந்தும் கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்தும் நன்கொடை வசூலித்து ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : கண்காட்சிகளில் இப்படி நஷ்டம் ஏற்பட்டால் நாம் ஈடுகட்டுவதற்குப் பதிலாக இந்த கண்காட்சிகள் நடத்துகிறபோதே அவைகள் எல்லாம் ஃபைர் இன்ஷூரன்ஸ் செய்துகொள்ள வேண்டுமென்ற முறையிலே ஏதாவது வழிவகை இருக்கிறதா? அப்படி இருந்தால் இந்த கண்காட்சியும் செய்துகொள்ள வேண்டுமென்று இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கொடுக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்த கண்காட்சி ஆண்டுதோறும் நடைபெறுவது இன்ஷூரான்ஸ் செய்வது அந்த அந்த பிரைமரி சொஸைடிகளைப் பொறுத்தது.

Distribution of essential commodities

*293 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Revenue be pleased to state:

(*a*) whether there is any proposal to open model shops in the State to distribute essential commodities at competitive prices; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

கோவை மாவட்டத்தில் வறட்சி நிவாரணப் பணிகள்

*294 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1975–76 நிதி ஆண்டில் வறட்சிப் பணிகளுக்கான துயர் துடைப்பு பணிக்காக கோவை மாவட்டத்திற்கு ஒதுக்கியுள்ள தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: வறட்சி நிவாரணப் பணிகளுக்காக கோவை மாவட்டத்திற்கு 1975–76 ஆம் நிதி ஆண்டில், ரூ. 165.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, ஒதுக்கப்பட்ட பணம் பற்றாக்குறையாக இருப்பதன் காரணமாக தொடங்கப்பட்ட வேலைகள் முடிவு பெறாமல் இருந்து கொண்டிருக்கின்றன. மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: வறட்சியெல்லாம் இப்போது முடிந்துவிட்டது.